# சங்கரானந்தம்-22

## 24.05.2024






காஞ்சி மஹாஸ்வாமிகளை போற்றும் பக்திப் பாடல்கள்

தேனுபுரீஸ்வரதாசன் இல. சங்கர்

104, அரவிந்த நகர், மாடம்பாக்கம், சென்னை - 126.

99404 47 437



அத்வைத குருவின் அதிகாலை விஸ்வரூப தரிஸனம்



நமது இரு கண்களால் ஒரு காட்சியை காண்பது போல "உண்டு" என்றும் "இல்லை" என்றும் இரு தரப்பினரும் விவாதிக்கும் ஒருவனை நமக்குணர்த்த ஆன்மீகத்தின் இரு கண்களாக காஞ்சி சங்கர சர்வக்ஞ பீடத்தில் வீற்றிருந்து அருள்வழி காட்டும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி மஹா பெரியவாளையும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி பெரியவாளையும், வணங்கி உற்சவ மூர்த்தியாக நம் கண் முன்னே உலவி அருள் பொழிந்து கொண்டிருக்கும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி பெரியவாளையும் அகம் குளிர வணங்கி அவர்தம் பாதம் பணிந்து முக்கண்ணனின் அம்சமாய் நமது மூன்றாவது கண்ணான ஞானக்கண்ணை திறக்கும் மஹாசிவ ரூபனான மஹா பெரியவாளின் பேரருளால் உந்தப்பட்டு மலர்ந்த பாடல்களில் சிலவற்றை "சங்கரானந்தம்" என்னும் தொகுப்பாக மஹா ஸ்வாமியின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து மஹா ஸ்வாமியின் பக்தர்களுக்கு மஹாப்ரஸாதமாக இந்நூல் வெளிவந்துள்ளது.

தொழுத கைகளோடு மஹா ஸ்வாமியின்
பழுத்த கோலத்தை காணாது ஏங்கிய என்
அழுத கோலத்தை கண்டு மனமிறங்கி என்னை
எழுது கோலாக ஏற்றருள் புரிந்த
ஏகாம்பர சிவ மஹா பெரியவாளின்
பொற் பாதங்கள் பணிந்து
என்றென்றும் இறையருட் பணியில்,

**தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர்.**

திருமதி. தனுஜா சங்கர் S.கைலாஷ்

## மஹாஸ்வாமிகளின் பேரருளால் ஜெயந்தி மற்றும் ஆராதனை நாளில் இதுவரை வெளிவந்துள்ள பாடல் தொகுப்புகள்

ௐ சங்கரானந்தம் - 01 வெளியான நாள் : 29.12.2013
ௐ சங்கரானந்தம் - 21 வெளியான நாள் : 06.01.2024

**சங்கரானந்த கானங்களை**
**www.soundcloud.com / madambakkamshanks**
மற்றும்
**www.soundcloud.com/lakshmikanthan-shankar**
ஆகிய வலைதளங்களில் கேட்டு மகிழலாம்

விலைமதிப்பில்லாத பொக்கிஷத்தைக் கொண்ட இப்புத்தகங்கள் மஹா ஸ்வாமிகளின் பக்தர்களுக்கு இலவசமாக தொடர்ந்து வழங்கிட தங்களால் இயன்ற நன்கொடைகளை வழங்கி குருவருள் பெறுவீர்.

குறைந்தபட்சம் ரூ.100/- அளிப்பவர்களுக்கு இப்புத்தகம் தபாலில் அனுப்பிவைக்கப்படும். தங்கள் பகுதியில் ஆன்மிக நிகழ்ச்சிகளின்பொழுது, தங்கள் இல்லத்தின் திருமணம், உபநயனம், சஷ்டியப்தபூர்த்தி, சதாபிஷேகம் போன்ற விசேஷங்கள் நடைபெறும் பொழுது இப்புத்தகங்களை அச்சு விலையில் பெற்று பக்தர்களுக்கு வழங்கி மகிழ விருப்பம் உள்ளவர்கள் அணுகவும்:


## தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர்
104 அரவிந்த நகர், மாடம்பாக்கம், சென்னை - 600 126.
**✆ 99404 47 437**
**(8.00 - 10.00 pm. only)**


சங்கரானந்த கானங்கள் வருடந்தோறும் மஹா பெரியவாளின் ஜெயந்தி மற்றும் ஆராதனையின்போது மஹாஸ்வாமிகளின் பக்தர்களுக்கு குரு அருட் பிரசாதமாக கிடைப்பதற்கு பல வகையிலும் அன்புள்ளத்தோடு பேராதரவு நல்கி வரும் அனைத்து நல் இதயங்களையும் வணங்கி மகிழ்கிறேன். அவர் தம் குடும்பத்தினர் அனைத்து வளங்களையும் நலன்களையும் பெற்று பல்லாண்டு வாழ மஹா பெரியவாளின் பொற்பாதங்களை பணிகிறேன்.

- தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர்

## சங்கடங்கள் தீர்த்தருளும்

## சங்கர குரு கானம்

(பிரபோ கணபதே - மெட்டு)

மஹா பெரியவா -

திருக் காஞ்சியில் அமர்ந்தருள் காருண்ய குரபரா

ஆதி சங்கரா அத்வைத சங்கரா
ஆதி ஷண்மதம் உணர்த்தியவா
ஆதி பீடமே அமர்ந்திட்ட குருவே
ஆதி காஞ்சியின் குரு சங்கரா



Sri Mahaswami at Kanchi Kamakoti Sankara Mutt
Kanchipuram - 1931

ஆலகாலம் உண்ட ஆனந்த தாண்டவா
ஆலடி அமர்ந்தருள் சிவ சங்கரா
ஆபத் பாந்தவா அனாத ரக்ஷகா
ஆதி காஞ்சியின் குரு சங்கரா

ஆறு முகம் கொண்டு வந்திட்ட மலரே
ஆறு நெற்றியின் அருட் சுடரே
ஆறுதல் அருள் குருஸ்வாமி நாதரே
ஆதி காஞ்சியின் குரு சங்கரா



# அபயம் அருள் காஞ்சி குரு
# காமகோடி பீட குரு
# மஹாபெரியவா கானம்

(நீலக் கடலின் ஓரத்தில் - மெட்டு)

கண் கண்ட தெய்வமே கருணேஸா
காலடி சங்கர குரு ஈஸா
கிட்டிட பேரருள் பணிந்தோமே - நின்
கீர்த்திகள் பாடியே மகிழ்ந்தோமே



அனுஷத்தில் உதித்திட்ட அத்வைதமே
ஆலடி குருவே பரப்பிரம்மமே
இம்மையை கடந்திட பணிந்தோமே - நின்
ஈடில்லா புகழ்பாடி மகிழ்ந்தோமே

சரவண ஷண்முக முருகேஸா
சாந்தமாய் அமர்ந்தருள் சங்கரேஸா
சிவகுரு நாதனே பணிந்தோமே - மன
சீற்றங்கள் குறைந்தே மகிழ்ந்தோமே

தண்டம் ஏந்தியே வந்தவரே
தாவிடும் மனதினை வென்றவரே
திக்கற் றோர்க்கருள் பதம் பணிந்தோம் - எம்
தீவினை குறைந்திட மகிழ்ந்தோமே

## காலத்தில் காத்தருளும்
## காஞ்சி சங்கர குரு  கானம்

(நீ தானா எனை அழைத்தது - மெட்டு)



காஞ்சியில் அமர்ந்தருள் கற்பகமே
கருணா ஸாகர அற்புதமே
கழல் பணிந் தோர்க்கருள் குரு பதமே
கரைசேர்த் தருள்வீர் நற்பதமே

ஆதியில் காலடி வந்திட்ட திருவே
ஆதிரையானே அருஉருவே
ஆதி காஞ்சியில் அமர்ந்திட்ட குருவே
அனுஷத்தில் உதித்திட்ட ஜெகத் குருவே

மாவடி அமர்ந்திட்ட மாமலை திருவே
மால் அயன் காணா பெருந்திருவே
மாநகர் காஞ்சியில் அமர்ந்திட்ட குருவே
மஹிமைகள் புரிந்தருள் ஜெகத் குருவே

காமாதி மலங்கள் மாய்த்திடும் திருவே
காமாக்ஷி உடனமர் சிவத்திருவே
காம கோடி பீடம் கொண்டருள் குருவே
கண் கண்ட தெய்வமே ஜெகத் குருவே

## குறைகள் தீர்த்தருளும்

## குரு காஞ்சி மாமுனி கானம்

ஹரஹர சங்கர தவத் திருவே

ஜெயஜெய சங்கர ஜெகத் குருவே

காஞ்சி சங்கர சிவத் திருவே

காமகோடி சங்கர ஜெகத் குருவே

கலவையில் உதித்திட்ட சுடரொளியே

கலங்கி நின்றோர்க் கருள் மதியொளிே

கலங்கரை விளக்காய் அருள் ஒளியே

காஞ்சியில் அமர்ந்தருள் பேரொளியே



கந்தனாய் வந்திட்ட சுடரொளியே

கழல் பணிந்தோர்க்கருள் கண்ணொளி

கருவறை கொண்டருள் கதிரொளியே

காந்தமாய் ஈர்த்தருள் பேரொளியே

கரைந்திட வினைகள் அருள் ஒளியே

கடந்திட பவக் கடல் அருள் ஒளியே

கலந்திட உனக்குள் அருள் ஒளியே

காஞ்சியில் அமர்ந்தருள் பேரொளியே

## ஆனந்த வாழ்வருளும் அத்வைத குரு

## மஹாபெரியவா கானம்

(பிரம்ம முராரி - மெட்டு)

காஞ்சி மா நகர் உறை கற்பக தருவே
கழல் பணிந் தோர்க்கருள் காருண்ய குருவே
காலடி குருவே கயிலை திருவே
கலங்கி நின்றோர்க் கருள் கலியுக திருவே



ஆலடி அமர்ந்தருள் ஆகாஸ திருவே
அலமலந்தோர்க் கருள் மெய்ஞான குருவே
ஆதியில் ஷண்மதம் தந்திட்ட திருவே
அடி பணிந்தோர்க்கருள் அத்வைத குருவே

ஆறு முகம் கொண்டு வந்திட்ட திருவே
அரு உரு சிவத்தின் அழகிய திருவே
ஆறுதலை அருள் ஸ்வாமிநாத குருவே
அருள்விழி மலர்ந்தருள் பூமிநாத குருவே

ஆதவனாய் நித்தம் ஒளியருள் திருவே
அத்வைதம் உணர்த்திட வந்திட்ட குருவே
ஆகமம் போற்றிடும் அருந்தவத் திருவே
அல்லல்கள் அறுத்தருள் திருக்காஞ்சி குருவே

## கர்மவினை போக்கி
## தர்ம வழி சேர்க்கும்
## சர்வக்ஞ பீட குரு கானம்

(தெலிசிதெ மோட்சமு - மெட்டு)

ஹர ஹர சங்கரா ஜெயஜெய சங்கரா
ஜெகத்குரு சங்கரா காஞ்சி மஹா பெரியவா

ஈடில்லா சங்கரா ஈஸ்வரா சங்கரா
ஈரெட்டும் அருள்பவா இன்னல்கள் களைபவா
ஈஸான்ய சங்கரா இக பர சுகம் அருள்பவா
ஈறாறில் மலர்ந்தவா இச் செகம் காக்க வந்தவா

ஆதி குரு சங்கரா அத்வைத சங்கரா
ஆதிசங்கர குருபரா ஷண்மதமே தந்தவா
ஆறுமுக பாலகா ஸ்வாமிநாத சங்கரா
ஆறுதலை தந்தருளும் ஆதி பீட சங்கரா

காம கோடி சங்கரா நாம கோடி சங்கரா
காருண்ய சங்கரா கரம் குவித்தோர்க்கருள்பவா
காமாக்ஷி சங்கரா காம தஹன சங்கரா
காலடியின் சங்கரா காஞ்சி மஹா பெரியவா



## நாடி வந்தோர்க்கருளும்
## நடமாடும் தெய்வ குரு கானம்

விண்ணும் மண்ணும் போற்றிடும் விஸ்வ நாத சங்கரரே
கண்ணால் ஈர்த்தே கலி தீர்ப்பார் அனுஷ நாத சங்கரரே

தியானரூப சங்கரரே மஹா யான வாஸ ருத்திரரே
ஞானமெல்லாம் நமக்குருளும் மோன ரூப சங்கரரே

சைவம் சாக்தம் வைணவமும் சௌரம் காணா பத்யமும்
கௌமாரமும் தந்திட்ட ஆதி குரு சங்கரரே

நெற்றிச் சுடர் வேலவனே பற்றிய பாவம் தீர்க்கும் பரனே
பெற்ற பிறப்பின் பொருளுரைப்பார் ஷண்முக ஸ்வாமி நாதரே

விழுப்புரத்தில் பிறந்தவரே வேத பொருளை உரைத்தவரே
சுழு முனையும் உணர்த்திடுவார் சூழும் துன்பம் போக்கிடுவார்

கலவையின் பால குரு காஞ்சியில் அமர்ந்த குரு
உலவியே உலக மெங்கும் நமக்கருள்வார் நம் குருவே

ஜெகம் காக்க வந்த குரு ஜெகதீசன் திரு உருவே
ஜெகந்நாத சங்கரரே ஸ்ரீ ஜெகத் குரு சங்கரரே



## ஆதி சங்கர அத்வைத சங்கர

## அனுஷ சங்கர கானம்

(செந்தமிழ் நாடெனும் போதினிலே - மெட்டு)

செந்தமிழ் நாடுறை சங்கரரே - ஞான
செந்தீயாய் அமர்ந்தருள் சங்கரரே
செந்தாழம் பூப் பதம் பணிந்திட அருள்வீர்
செந்தாமரைப் பூ முக சங்கரரே



சந்திர சேகர குரு ஸ்வாமி - எங்கள்
சந்ததி காத்திடும் மஹா ஸ்வாமி
சந்ததம் பணிந்திட அருள்வீரே - எங்கள்
சந்திர மௌலீஸ்வர சிவ ஸ்வாமி

சாந்தமாய் அமர்ந்தருள் சங்கரரே - வேத
சந்தமாய் வாக்கருள் சங்கரரே
சாந்தமும் சௌக்கியமும் அருள் குருவே - ஆத்ம
சாந்தியை அடைந்திட அருள்வீரே

சிந்தித்தோர் துயர்தீர்க்கும் சங்கரரே - புன்னகை
சிந்தியே அருள் காஞ்சி சங்கரரே
சிந்திக்க சங்கர நாமம் நித்தம் - எங்கள்
சிந்தையில் நிறைந்தே அருள்விரே

## அத்வைதம் உணர்த்த வந்த

## ஆதி ஆலடி சங்கர

## காஞ்சி சங்கர குரு கானம்

(காயத்ரி மந்திரம் - மெட்டு)

கற்றவர் போற்றிடும் கற்பகமே
மற்றவர்க்கும் அருள் அற்புதமே
நற்றுணையாகும் பொற்பதமே
போற்றியே பெறுவோம் நற்பதமே



பெற்றிட தனமருள் கற்பகமே - பதம்
பற்றி நின்றோர்க் கருள் அற்புதமே
போற்றியே துதிப்போம் பொற்பதமே - நலம்
பெற்றே அடைவோம் நற்பதமே

நற்றமிழ் நாட்டின் கற்பகமே - ஞானம்
பெற்றிட அருளும் அற்புதமே
சிற்பர நாதனின் பொற்பதமே - நித்தம்
பற்றியே அடைவோம் நற்பதமே

பொற்சபை நின்றிட்ட கற்பகமே - ஞாலம்
போற்றிடும் காஞ்சியின் அற்புதமே
முற்றிய வினை தீர்க்கும் பொற்பதமே - பணிந்து
பெற்றிடுவோம் பெரு நற்பதமே

## நாடி வந்தோர்க்கருளும்

## நடமாடும் தெய்வ குரு கானம்

(காயத்ரி மந்திரம் - மெட்டு)

அனுஷ சங்கரா பத சரணம்

அக்ஷய சங்கரா பத சரணம்

அனுகிரஹ குருவே பத சரணம்

அனுதினம் வரமருள் பத சரணம் (நினைத்திட உம்மை)

ஆதிரையானே பத சரணம் - பஞ்சமி

ஆதிரை குருவே பத சரணம்

ஆலடி குருவே பத சரணம் - அடியேன்

ஆதுரம் தீர்த்தருள் பத சரணம்



விசாக நாதனே பத சரணம் - மூன்றாம்

விழியில் மலர்ந்தவா பத சரணம்

விந்தைகள் புரிந்தவா பத சரணம் - மன

விசாரம் தீர்த்தருள் பத சரணம்

கலவையின் பேரொளி பத சரணம் - மன

கலக்கங்கள் தீர்த்திடும் பத சரணம்

கலங்கரை விளக்கமே பத சரணம் - உன்னுள்

கலந்திட வரமருள் பத சரணம்

## குறைகள் தீர்த்தருளும்
## குரு காஞ்சி மாமுனி கானம்

(ஸ்ரீ நிவாஸா கோவிந்தா - மெட்டு)

பதம் பணிவோம் குரு பதம் பணிவோம்
பவித்ர பாதமே நிதம் பணிவோம்
பதம் பணிவோம் குரு பதம் பணிவோம் - நற்
பதமருள் பதமே நிதம் பணிவோம்



அத்வைத குருவே பத சரணம்
சாத்வீக திருவே பத சரணம்
சத்திய சனாதன பத சரணம்
நித்யானுக்ரஹ பத சரணம்

எத்திக்கும் நடந்திட்ட பத சரணம்
தித்திக்கும் வரமருள் பத சரணம்
சத்திய வழிசேர்க்கும் பத சரணம்
நித்யானுக்ரஹ பத சரணம்

தத்த குருமூர்த்தி பத சரணம்
சித்தத்தில் அமர்ந்தருள் பத சரணம்
சத்சித் ஆனந்த பத சரணம்
நித்யானுக்ரஹ பத சரணம்

வைத்திய நாதரே பத சரணம் - சின்
முத்திரை நாதரே பத சரணம்
சத்திய சீலரே பத சரணம்
நித்யானுக்ரஹ பத சரணம்

# ஸ்ரீசங்கர பகவத்பாத ஸ்தோத்திரம்

## ஸ்ரீ தோடகாஷ்டகம்

விதிதாகில சாஸ்த்ர ஸுதா ஜலதே மஹிதோப நிஷத் கதிதார்த்த நிதே!
ஹ்ருதயே கலயே விமலம் சரணம் பவ சங்கர தேசிக மே சரணம் (1)

கருணா வருணாலய பாலய மாம் பவஸாகரதுக்க விதூன ஹ்ருதம்
ரசயாகிலதர்சன தத்வவிதம் பவ சங்கர தேசிக மே சரணம் (2)

பவதா ஜனதா ஸுஹிதா பவிதா நிஜபோத விசாரண சாருமதே
கலேயேச்வர ஜீவ விவேக விதம் பவ சங்கர தேசிக மே சரணம் (3)


பவ ஏவ பவானிதி மே நிதராம் ஸமஜாயத சேதஸி கௌதுகிதா
மம வாரய மோஹமஹாஜல திம் பவ சங்கர தேசிக மே சரணம் (4)


ஸுக்ருதே அதிக்ருதே பஹுதா பவத: பவிதா ஸமதர்சன லாலஸதா
அதி தீனமிமம் பரிபாலய மாம் பவ சங்கர தேசிக மே சரணம் (5)

ஜகதீ மவிதும் கலிதாக்ருதய: விசரந்தி மஹா மஹ;ஸச்சலத:
அஹிமாம் சுரிவாத்ர விபாஸ புர: பவ சங்கர தேசிக மே சரணம் (6)

குருபுங்கவ புங்கவகேத நதே ஸமதா மயதாம் நஹி கோபி ஸுதி:
சரணாகதவத்ஸல தத்வ நிதே பவ சங்கர தேசிக மே சரணம் (7)

விதிதா ந மயா விசதைக கலா நச கிஞ்சன காஞ்சனமஸ்தி குரோமி
த்ரு தமேவ விதேஹி க்ருபாம் ஸஹஜாம் பவ சங்கர தேசிக மே சரணம் (8)





## அனுகிரஹம் புரிந்தருளும் அனுஷ சங்கர கானம்

அனுஷ சங்கர அக்ஷய சங்கர அத்வைத சங்கர பாஹிமாம்
ஆகம் சங்கர ஆதிரை சங்கர ஆனந்த சங்கர ரக்ஷமாம்
ஆதி சங்கர ஆலடி சங்கர ஆர்யாம்பா சங்கர பாஹிமாம்
அச்சுத சங்கர அம்புலி சங்கர அம்பல சங்கர ரக்ஷமாம்
காலடி சங்கர காமாக்ஷி சங்கர காஞ்சி சங்கர பாஹிமாம்
கமல சங்கர கற்பக சங்கர கயிலை சங்கர ரக்ஷமாம்
காசி சங்கர காவி சங்கர காமகோடி சங்கர பாஹிமாம்
கலவை சங்கர காருண்ய சங்கர கங்காதீஸ்வர சங்கர ரக்ஷமாம்
சாது சங்கர சாத்வீக சங்கர சாம்ப சதாசிவ பாக்ஷமாம்
சம்போ சங்கர சஞ்சார சங்கர சந்திர சேகர ரக்ஷமாம்
சாயுஜ்ய சங்கர சாதக சங்கர ஷண்மத சங்கர பாஹிமாம்
சண்முக சங்கர சண்மார்க்க சங்கர கருணா ஸாகர ரக்ஷமாம்


சங்காரனந்த கானங்கள் தொடர்ந்து வெளிவர தங்களால் இயன்ற நன்கொடைகளை நல்கி குருவருள் பெறுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**ரூ.100/-** அளிப்பவர்களுக்கு இந்த வெளியீடு தபாலில் அனுப்பப்படும்.

**ரூ.504/-** அளிப்பவர்களுக்கு இதுவரை வெளிவந்த வெளியீடுகள் Pdf / Whatsapp-ல் அனுப்பப்படும்.

**ரூ.1008/-** அல்லது அதற்கு மேல் அளிப்பவர்களுக்கு சமீபத்திய மூன்று வெளியீடுகள் மற்றும் 250 சங்காரனந்த கானங்கள் ஆடியோ - Pen Drive மூலம் தபாலில் அனுப்பப்படும்.

**G-Pay No : 63 83 45 35 03**
**Whatsapp No : 99404 47 437**

நன்கொடை அளித்தவர்கள் தங்களின் முகவரி மற்றும் தொகை மேற்கண்ட வாட்ஸ்அப் எண்ணில் தெரியப்படுத்தவும்.

- தேனுபுரீஸ்வர தாசன் இல. சங்கர்

## அத்வைத குரு ஆதிசங்கர கானம்

(நாத விந்து கலாதி நமோ நம - மெட்டு)


அன்னையின் மடியில் ஆதி சங்கரர்
ஆதி சிவனின் அவதார சங்கரர்
இன்முகத் தோடருள் பால சங்கரர் தாள் பணிவோமே

அற்புதம் புரிந்திடவந்திட்ட சங்கரர்
ஆதிரை நாளில் பிறந்திட்ட சங்கரர்
இம்மையும் மறுமையும் உணர்த்திய சங்கரர் தாள் பணிவோமே

அன்னையின் காலடி போற்றி சங்கரர்
ஆதி பூர்ணையை அழைத்திட்ட சங்கரர்
இல்லத்தில் உள்ளத்தில் அமர்த்தியே சங்கரர் தாள் பணிவோமே

அஞ்ஞானம் போக்கிட வந்திட்டசங்கரர்
ஆர்யாம்பாஅனுமதி பெற்றிட சங்கரர்
இதமாய் நாடகம் ஆடிய சங்கரர் தாள் பணிவோமே

அயாசகன் ஏழ்மையை உணர்ந்திட்ட சங்கரர்
ஆகாஸ பொன்மழை தந்திட்ட சங்கரர்
இச்செகம் காத்திட புறப்பட்ட சங்கரர் தாள் பணிவோமே





அன்னை பூமியை அளந்திட்ட சங்கரர்
ஆதி கயிலையும் நடந்திட்ட சங்கரர்
இரவும் பகலும் தியானித்த சங்கரர் தாள் பணிவோமே

அம்மை அப்பனை உணர்த்திட சங்கரர்
ஆதி பூஜைகள் அருளிய சங்கரர்
இச்செகம் செழித்திட மடங்கள் அமைத்திட்ட தாள் பணிவோமே

அத்வைதம் உணர்த்திட வந்திட்ட சங்கரர்
ஆறு மதங்களை வகுத்திட்ட சங்கரர்
இவ்வுல குயர்ந்திட அருளிய சங்கரர் தாள் பணிவோமே

அஹிம்ஸையை போதித்த ஆதிசங்கரர்
ஆதி குதர்க்கங்கள் வென்றிட்ட சங்கரர்
இச்செகம் போற்றிடும் ஆதிசங்கரர் தாள் பணிவோமே

அழகிய காஞ்சியின் சர்வக்ஞ சங்கரர்
ஆதி பூமியில் அமர்ந்திட்ட சங்கரர்
இடபாக அன்னையோ டருளும் சங்கரர் தாள் பணிவோமே






## சித்த சுத்தி தந்தருளும் சத்தியத் திருவுரு

## சந்திரசேகர மஹா பெரியவா கானம்

(நாதர் முடி மேல் இருக்கும் - மெட்டு)

அத்ரி புத்ர ஸ்ரீ தத்த மஹா பெரியவா - காஞ்சி
க்ஷேத்ர ப்ரிய சாம்ப சிவ மஹா பெரியவா
நேத்ர தீக்ஷை தந்தருள்வீர் மஹா பெரியவா - த்ரி
நேத்ரரூப ஈஸ்வரனே மஹா பெரியவா

சித்த சுத்தி பெற்றிடவே மஹா பெரியவா - அருள்வீர்
சத் சித் ஆனந்தமே மஹா பெரியவா
சத்தியத்தின் திருவுருவே மஹா பெரியவா - அருள்வீர்
சத்தியத்தின் பாதையே மஹா பெரியவா



அத்வைத சத்தியமே மஹா பெரியவா - அருள்வீர்
மத்யார்ஜுன மஹா லிங்க மஹா பெரியவா
மத்வ குல மாணிக்கமே மஹா பெரியவா - வேத
சத்திய ரூப சங்கரமே மஹா பெரியவா

எத்திக்கும் காத்தருளும் மஹா பெரியவா - ஞானம்
சித்திக்க வரமருள்வீர் மஹா பெரியவா
தித்திக்கும் வாழ்வருள்வீர் மஹா பெரியவா - முக்தியே
சித்திக்கும் தடம் சேர்ப்பீர் மஹா பெரியவா

## குறையிலா அருள்

## காஞ்சி குருநாத கானம்

(ஜகிரி நந்தினி - மெட்டு)

மும்முனை சூலமும் இருவிரல் உடுக்கையும்
ஒரு கை அபயமும் அருள் சிவனே
மும்மலம் போக்கியே இருவினை தீர்த்தே
ஒரு கை அபயம் அருள் குருவே

மும்மூர்த்தி ரூபனே இருவராய் ஆனவா
ஒரு நிகர் இல்லா சிவபரமே
மும்மூர்த்தி ஆகிட இருவரை தந்தவா
ஒரு நிகர் இல்லா குருபரமே




ஆலடி குருவே காலடி திருவே
ஞாலம் காத்திடும் பத சரணம்
கோலமுனி உரு கலவை திருவே
வைகாசி நாதா பத சரணம்

ஷண்மத சங்கரா ஷட்கோண சுந்தரா
எண் திசை காத்தருள் பத சரணம்
வெண்திங்கள் முகத்தவா அனுஷத்தில் உதித்தவா
வைகாசி நாதா பத சரணம்

## கலவையில் உதித்திட்ட சுடரொளி
## காந்தமாய் ஈர்தருளும் காஞ்சி மஹா பெரியவா கானம்

(நீலக் கடலின் ஓரத்தில்  - மெட்டு)

கலவையில் உதித்திட்ட சுடரொளியே
கலங்கி நின்றோர்க்கருள் கதிரொளியே
கலங்கரை விளக்காய் அருள் ஒளியே - காற்றில்
கலந்திட அருள்வீர் பேரொளியே

அலகிலா குணமுடை சுடரொளியே
அலமலந்தோர்க்கருள்  கதிரொளியே
அளவிளா ஆனந்தம் அருள் ஒளியே - கால
அளவுகள் கடந்தருள் பேரொளியே



சலனமில்லாதருள் சுடரொளியே
சலசலப் படக்கிடும் கதிரொளியே
சலங்கையின் ஒலியோடருள் ஒளியே - மன
சலனங்கள் போக்கிடும் பேரொளியே

தலமெங்கும் நடந்திட்ட சுடரொளியே - ஆதி
தலத்தில் அமர்ந்தருள் கதிரொளியே
தளர்ந்திடா தெம்பினை அருள் ஒளியே - மனம்
தளரா வரமருள் பேரொளியே

## சமயத்தில் காத்தருளும்
## காஞ்சி சங்கர குரு கானம்

(மலர்கள் நனைந்தன பனியாலே - மெட்டு)

சந்திர சேகர பத சரணம்
சாந்த மஹேஸ்வர குரு சரணம்
சிந்தையில் நிறைந்தருள் சிவ சரணம் - மன
சாந்தியை தந்திடும் தவ சரணம்



கந்தனாய் வந்திட்ட பத சரணம்
காந்தமாய் ஈர்த்தருள் குரு சரணம்
குந்தகம் போக்கிடும் சிவ சரணம் - சூர்ய
காந்தியாய் அமர்ந்தருள் தவ சரணம்

அந்தகன் பணிந்திட்ட பத சரணம்
ஆந்திரம் போற்றிடும் குரு சரணம்
இந்திரன் துதித்திட்ட சிவ சரணம் - முக்தி
ஈந்தருள் காருண்ய தவ சரணம்

மந்திர மலையே பத சரணம்
மாந்தருக் கருளிடும் குரு சரணம்
முந்தியே வரமருள் சிவ சரணம் - வேத
மந்திர ரூபமே தவ சரணம்

## நவநிதி நல்கிடும் காஞ்சி குருநாதர்
## நவவித பக்தி கானம்

திருப்பாதம் பணிந்திடுவோம் திருவருளே பெற்றிடுவோம்
குரு பாதம் பணிந்திடுவோம் குறைகள் யாவும் களைந்திடுவோம்

நவ வித பக்தி செய்தே நவ நிதியும் பெற்றிடுவோம்
தவ நிலை அடைந்திடுவோம் பவ பயம் போக்கிடுவோம்
கவலைகள் மறந்திடுவோம் காம குரோதம் துறந்திடுவோம்
பாவங்கள் கரைத்திடுவோம் பரம பதம் அடைந்திடுவோம்

குருவின் பெருமை கேட்டிடுவோம் அவர்உபதேசம் கேட்டிடுவோம்
குருவின் வழி நடந்திடுவோம் பெரு வழி அடைந்திடுவோம்
குருவின் புகழ் பாடிடுவோம் மற்றவர்க்கும் பகிர்ந்திடுவோம்
குரு பக்தியை பெற்றிடுவோம் குறைகள் யாவும் களைந்திடுவோம்

குரு நினைவில் திளைத்திடுவோம் குரு நாமம் ஜெபித்திடுவோம்
குரு உருவை தியானிப்போம் பெருவரமே பெற்றிடுவோம்
குரு பாதம் பூஜிப்போம் திருப்பாதம் தினம் துதிப்போம்
குரு பாத பங்கஜமே நெஞ்சிலேற்று நெகிழ்ந்திடுவோம்

குரு உருவை அர்ச்சிப்போம் குருவை நெஞ்சில் ஸ்பரிசிப்போம்
குரு மார்களின் திரு முன்னே தூப தீபம் ஏற்றிடுவோம்
குரு வந்தனம் செய்திடுவோம் அகில் சந்தனம் சாற்றிடுவோம்
குரு பந்தனம் நெஞ்சில்பெற்றே பிருந்தாவனம் அடைந்திடுவோம்

குரு தாஸ பக்தி பெற அப்யாஸம் செய்திடுவோம்
குருவே தாய்தந்தையென சிறு நெஞ்சில் உணர்ந்திடுவோம்
குருவே நம் நன்பனென நம்குறைகள் நவின்றிடுவோம்
குரு முன் நம் ஆன்மாவை நிவேதனம் செய்திடுவோம்



## காலத்தில் காத்தருளும்
## காஞ்சி சங்கர குரு கானம்

(ஹரிவராசனம் - மெட்டு)

அத்வைத சங்கரா ஆதி சங்கரா
அனுஷத்தில் உதித்த வேத சங்கரா
அனுக்ரஹ நாதா ஆலடி நாதா
அனுதினம் பணிவோம் குரு ஸ்வாமி நாதா

அபய சங்கரா அருள் ஆதி சங்கரா
அனுஷ சங்கரா அருள் காஞ்சி சங்கரா
அமைதியை உணர்த்தி அருள் ஆலடி குருவே
அனுதினம் பணிவோம் காஞ்சி மஹா பெரியவா

அம்புலி நாதா சந்திர மௌலீஸ்வரா
அம்பிகை தலமே அமர் சந்திரசேகரா
அம்பலம் நின்றே அருள் ஆனந்த ஈஸா
அனுதினம் பணிவோம் காஞ்சி மஹா பெரியவா

அண்டம் காத்திடும் நீல கண்ட ஈஸனே
அண்டி வந்தோர்க்கே அருள் காலகாலனே
அஞ்சி நின்றோர்க்கே அபயம் தந்தருள்பவா
அனுதினம் பணிவோம் காஞ்சி மஹா பெரியவா



## சங்கடங்கள் தீர்த்து மங்களங்கள் அருளும்

## காஞ்சி சங்கர குரு கானம்

(சிட்டுக் குருவி சிட்டுக் குருவி - மெட்டு)

சங்கர குரு சங்கர குரு காஞ்சி சங்கரா - மன
சங்கடங்கள் தீர்த்தருளும் மஹா பெரியவா
சங்கமமும் சேதுவும் நடந்த சங்கரா - ஆதி
சங்கரரின் வழி வந்த மஹா பெரியவா

சித்திரையின் முழு நிலவே காஞ்சி சங்கரா
சித்தி புத்தி தந்தாட்கொள்ளும் மஹா பெரியவா
சித்தத்தில் உறைந்தருள்வீர் சிவ சங்கரா - நல்
சித்திரமாய் சிரித்தருளும் மஹா பெரியவா

வைகறையின் சூரியனே வேத சங்கரா - நல்
வைகாசி விசாகனே குரு சங்கரா
வைகாசி அனுஷத்தில் உதித்த சங்கரா - வாழ்வில்
வைகறையே நிதமருளும் மஹா பெரியவா

தை வெள்ளியில் அருள்தேவி காமாக்ஷியே - நல்
தைப் பூச நாயகனே ஸ்வாமிநாதனே
தைத் திங்களாய் திருப்பமருள் தண்ட பாணியே - மனோ
தைரியமும் தனதான்யமும் அருள் ஸ்வாமியே



## அஞ்ஞான இருள்போக்கும் ஆலடி குரு
## மஹா பெரியவா கானம்

ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமியே
ஸ்ரீ சந்திர சேகர குரு ஸ்வாமியே
ஸ்ரீ தத்தரூபரே தக்ஷிணாமூர்த்தியே
ஸ்ரீ சந்திர சேகர குரு ஸ்வாமியே

அண்டங்கள் காத்திடும் ஆதவா
அண்டி நின்றோர்க் கருள் மாதவா
அன்போ டருள்பவா ஆடியே நின்றவா
அடி பணிந்தோர்க் கருள் பெரியவா

அருள் பொங்கும் விழியாலருள் பெரியவா
அருஉரு சிவமே ஆண்டவா
அருவியாய் வரமருள் ஆனந்த தாண்டவா
அடி பணிந்தோர்க் கருள் பெரியவா

அஞ்சியே வந்தோர்துயர் தீர்த்தவா
அஞ்சோடெட்டும் உரைத்திட்டவா
அஞ்ஞான இருள்தனை போக்கிய புங்கவா
அடி பணிந்தோர்க் கருள் பெரியவா



## காஞ்சியில் அமர்ந்தருளும் காருண்ய திருவுரு
## மகா பெரியவா கானம்

(பூவாகி காயாகி - மெட்டு)

குரு சங்கர பதம் பணிந்திடுவோம்
குறைகள் யாவும் களைந்திடுவோம்
குரு நாதர் நாமம் சொல்லி
குரு பதமே பணிந்திடுவோம் - ஜெகத்

சத்தியத்தின் திரு உருவே
சாத்வீக சற்குருவே
சித்தி அருள் சிவத்திருவே
சீர் காஞ்சி சங்கரரே



அத்வைத திரு உருவே
ஆத்தீக சற்குருவே
இத்தரணி அமர்ந்தவரே
ஈர்த்தருளும் சங்கரரே (எமை)

மத்வ வழி வந்தவரே
மாத்ரு பூதேஸ்வரரே - விஸ்வ
மித்ர சிவத் திருவே
மீளாத் துயர் தீர்ப்பவரே(என்றும்)


**ஸ்ரீ மஹா பெரியவா கோசாலை**

டெல்லஸ் அவென்யு Phase 2, ராஜகீழ்பாக்கம், சென்னை - 600 073.





மஹா பெரியவா பெருங்கருணையுடன் தனிச்சன்னதி கொண்டு அருள்பாலிக்கும் இக்கோசாலையில் 50க்கும் மேற்பட்ட பசுக்கள் பாரம்பரிய முறைப்படி பராமரிக்கப்படுகிறது. மஹா பெரியவாளின் பக்தர்கள் கோசம்ரக்ஷணத்திற்கு தங்களால் இயன்ற காணிக்கைகளை மாதந்தோறும் அளித்து கோமாதாவின் அருளையும் மஹாஸ்வாமிகளின் ஆசிகளையும் பெறலாம்.

தொடர்புக்கு : **திரு. ராமச்சந்திரன் Cell : 94440 42055**

**SRI MAHA PERIYAVA GOSALAI**

**SB A/C No. 500101013084353 IFSC CODE : CIUB0000286**
**CITY UNION BANK, RAJAKILPAKKAM BRANCH**

## அத்வைத குருவிற்கோர் அக்ஷர மாலை

(அன்புருவம் ஆனவரே ராகவேந்திரா - மெட்டு)

மஹா பெரியவா காஞ்சி மஹா பெரியவா
மஹா லிங்க தவரூப மஹா பெரியவா
மஹா பெரியவா காஞ்சி மஹா பெரியவா
மஹாலக்ஷ்மி ஸ்வாமி நாத மஹா பெரியவா

அஞ்சேல் என்றருள் குருவே மஹா பெரியவா
ஆதி குரு சங்கரரே மஹா பெரியவா
இமயம் முதல் குமரி வரை நடந்த சங்கரா
ஈடில்லா ஜெகத்குரு காஞ்சி சங்கரா

உமையவளின் உறுதுணையே சிவசங்கரா
ஊர்தோறும் உலாவந்த தவசங்கரா
எண் திசையும் காத்தருளும் குரு சங்கரா
ஏகம்ப நிழல் அமர்ந்த காஞ்சி சங்கரா

ஐ விரலால் அபயமருள் மஹா பெரியவா
ஒப்பில்லா சற்குருவே மஹா பெரியவா
ஓயாதமர்ந் தருள்புரியும் மஹா பெரியவா -ஆதி
ஔஷத கிரிநாதரே மஹா பெரியவா



## சங்கடங்கள் தீர்த்தருளும்
## சங்கர குரு சரணகானம்

(பலுக்கேபங்காரமாயனா - மெட்டு)

காலமெல்லாம் காத்தருள் சங்கரரே
- திருக் காஞ்சிநகரில்
காலமெல்லாம் அமர்ந்தருள் சங்கரரே

ஆதிகுருவேஆலடிகுருவே
ஆதிசங்கரஅவதாரதிருவே
ஆதி ஷண்முக ஸ்வாமிநாதரே
ஆதிபீடம் அமர்ந்தருள் குருவே

தென்திசைதவமேவடமலைசிவமே
தெற்கும் வடக்கும் இணைத்தபரமே
தென்னகத் திருவேதேன்தமிழ் குருவே
தென்னாடுடையமஹா ஸ்வாமி

ஆகமம் போற்றிடும் ஆனந்தசிவமே
ஆறு வழிகள் தந்திட்டதவமே
ஆறு தலைகொண்டஅறுபடைதிருவே
ஆறுதலைஅருள் அத்வைத குருவே



# விழிகளால் வரமருள்
# விஸ்வகுரு கானம்

(எளியோரை தாழ்த்தி வலியோரை வாழ்த்தும் - மெட்டு)

விழி கிடைக்குமே அபயக் கரம் கிடைக்குமே - நம்
குரு நாதர் சன்னதியில் விடை கிடைக்குமே - காஞ்சி
குரு நாதர் சன்னதியில் விடை கிடைக்குமே

ஓயாத அலையாக வினை வந்து மோதும் போதும்
குரு நாதர் குரல் கேட்குமே - நம் மனதிலென்றும்
குரு நாதர் குரல் கேட்குமே

தேயாத தீவினையோடு தீயாக வாடும் போது
குரு நாதர் நிழல் கிடைக்குமே - நமக்கென்றும்
குரு நாதர் நிழல் கிடைக்குமே

கரையாத கண்ணீராய் கர்மவினை பெருகும் போது
குரு நாதர் அருள் கிடைக்குமே - கண்ணீர் துடைக்கும்
குரு நாதர் அருள் கிடைக்குமே


## சங்கரானந்தம்

இது வரை சற்றேறக்குறைய 1000 பாடல்களுக்கு மேல் எழுத வைத்துள்ள காஞ்சி மஹாஸ்வாமி, 19 சங்கரானந்த தொகுப்புகளை மஹா பெரியவாளின் பக்தர்களுக்கு அருட்பிரசாதமாக 2,00,000 பிரதிகளுக்கு மேல் வழங்கி அடியேனை அகமகிழச் செய்துள்ளார். மஹா பெரியவாளின் அத்யந்த பக்தர்களின் பொருளுதவியால் இப்பெரும் புண்ணிய குரு கைங்கர்யம் அமோகமாக நடைபெற்றுக்கொண்டுள்ளது. அடுத்து சங்கரானந்தம் - தொகுப்பு 22 வெளிவர தங்களால் இயன்ற பொருளுதவி செய்து குரு கைங்கர்யத்தில் பங்குபெறுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஊர் கூடி தேர் இழுத்தல் போல
பலர் கூடி மஹாபெரியவாளின் மஹிமைகளை போற்றும் சங்கரானந்த தேரை
மலர் தூவி வரவேற்று அனைவரது இல்லத்திலும் சேர்த்து
பலர் மனமகிழ்ந்து அகம்குளிரச் செய்வோம் வாரீர். . .

என்றென்றும் குரு கைங்கர்யத்தில் திளைத்து , திருப்பாதம் பணிந்து

**தேனுபுரீஸ்வரதாசன் இல.சங்கர், 99404 47 437.**

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு
# ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி மஹாஸ்வாமிகள்
# அஷ்டோத்திர சத நாமாவளி

ஓம் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதீஸ்வராய நம:
ஓம் ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி குருப்யோ நம:
ஓம் ஸன்யாஸாஸ்ரம சிகராய நம:
ஓம் காஷாய தண்ட தாரிணே நம:
ஓம் ஸர்வபீடாபஹாரிணே நம:
ஓம் ஸ்வாமிநாத குரவே நம:
ஓம் கருணாஸாகராய நம:
ஓம் ஜகதாகர்ஷண சக்திமதே நம:
ஓம் ஸர்வ சராசர ஹ்ருதயஸ்தாய நம:
ஓம் பக்த பரிபாலக ஸ்ரேஷ்டாய நம:
ஓம் தர்ம பரிபாலகாய நம:
ஓம் ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வத்யாசார்யாய நம:
ஓம் ஸ்ரீ விஜயேந்த்ர ஸரஸ்வதி பூஜிதாய நம:
ஓம் சிவ சக்தி ஸ்வரூபகாய நம:
ஓம் பக்த ஜன ப்ரியாய நம:
ஓம் ப்ரம்ம விஷ்ணு சிவைக்யஸ்வரூபாய நம:
ஓம் காஞ்சீ க்ஷேத்ர வாஸாய நம:
ஓம் கைலாஸ சிகர வாஸாய நம:
ஓம் ஸ்வதர்ம பரிபோஷகாய நம:
ஓம் சாதுர் வர்ண்ய சம்ரக்ஷகாய நம:
ஓம் லோக ரக்ஷண ஸங்கல்பாய நம:
ஓம் ப்ரஹ்ம நிஷ்டாபராய நம:
ஓம் ஸர்வ பாப ஹராய நம:
ஓம் தர்ம ரக்ஷண ஸந்துஷ்டாய நம:
ஓம் பக்தார்ப்பித தன ஸ்வீகர்த்ரே நம:
ஓம் ஸர்வோபநிஷத் ஸாரஞ்ஞாய நம:
ஓம் ஸர்வ சாஸ்த்ர கம்யாய நம:
ஓம் ஸர்வ லோக பிதாமஹாய நம:
ஓம் பக்தாபீஷ்ட ப்ரதாயகாய நம:
ஓம் ப்ரம்மண்ய போஷகாய நம:
ஓம் நானாவித புஷ்பார்ச்சித பதாய நம:
ஓம் ருத்ராக்ஷ கிரிட தாரிணே நம:
ஓம் பஸ்மோத் தூளித விக்ரஹாய நம:
ஓம் ஸர்வக்ஞாய நம:
ஓம் ஸர்வ சராசர வ்யாபகாய நம:
ஓம் அநேக சிஷ்ய பரிபாலகாய நம:
ஓம் மனஸ் சாஞ்சல்ய நிவர்த்தகாய நம:





ஓம் அபய ஹஸ்தாய நம:
ஓம் பயாபஹாய நம:
ஓம் யக்ஞ புருஷாய நம:
ஓம் யக்ஞாநுஷ்டான ருசிப்ரதாய நம:
ஓம் யக்ஞ ஸம்பன்னாய நம:
ஓம் யக்ஞ ஸஹாயகாய நம:
ஓம் யக்ஞ பலதாய நம:
ஓம் யக்ஞ ப்ரியாய நம:
ஓம் உபமான ரஹிதாய நம:
ஓம் ஸ்படிக துளஸீ ருத்ராக்ஷ ஹார தாரிணே நம:
ஓம் சாதுர்வர்ண்ய ஸமத்ருஷ்டயே நம:
ஓம் ருக் யஜுஸ் ஸாமாதர்வண சதுர்வேத ஸம்ரக்ஷகாய நம:
ஓம் தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபாய நம:
ஓம் ஜாக்ர ஸ்வப்ன ஸுஷுப்தயவஸ்தாதீதாய நம:
ஓம் கோடி ஸுர்யதுல்ய தேஜோமய சரீராய நம:
ஓம் ஸாதுஸங்க ஸம்ரக்ஷகாய நம:
ஓம் அச்வகஜ கோ பூஜா நிர்வர்த்தகாய நம:
ஓம் குருபாதுகா பூஜா துரந்தராய நம:
ஓம் கனகாபிஷிக்தாய நம:
ஓம் ஸ்வர்ண வில்வதள பூஜிதாய நம:
ஓம் ஸர்வ ஜீவ மோக்ஷதாய நம:
ஓம் மூகவாக்தான நிபுணாய நம:
ஓம் நேத்ர தீக்ஷாதானாய நம:
ஓம் த்வாதச லிங்க ஸ்தாபகாய நம:
ஓம் கான ரஸஞ்ஞாய நம:
ஓம் ப்ரஹ்ம ஞானோபதேசகாய நம:
ஓம் ஸகல கலா ஸித்திதாய நம:
ஓம் சாதுவர்ண்ய பூஜிதாய நம:
ஓம் அநேகபாஷா ஸம்பாஷண கோவிதாய நம:
ஓம் அஷ்ட ஸித்திப்ரதாயகாய நம:
ஓம் ஸ்ரீ சாரதா மட ஸுஸ்திதாய நம:
ஓம் நித்தியான்னதான ஸுப்ரீதாய நம:
ஓம் ப்ரார்த்தனாமாத்ர ஸுலபாய நம:
ஓம் பாதயாத்ரா ப்ரியாய நம:
ஓம் நானாவிதமத பண்டிதாய நம:
ஓம் சுருதி ஸ்ம்ருதி புராணஞ்ஞாய நம:
ஓம் தேவ யக்ஷ கின்னர கிம்புருஷ பூஜ்யாய நம:
ஓம் ஸ்ரவணானந்தகர கீர்த்யே நம:
ஓம் தர்சனானந்தாய நம:
ஓம் அத்வைதானந்த பரிதாய நம:
ஓம் அவ்யாஜ கருணா மூர்த்தயே நம:




ஓம் சைவ வைஷ்ணவாதி மான்யாய நம:
ஓம் சங்கராசார்யாய நம:
ஓம் தண்ட கமண்டலு ஹஸ்தாய நம:
ஓம் வீணாம்ருதங்காதி ஸகலவாத்யநாத ஸ்வரூபாய நம:
ஓம் ராமகதா ரஸிகாய நம:
ஓம் வேத வேதாங்க ஆகமாதி ஸகல கலா ஸதஸ் ப்ரவர்தகாய நம:
ஓம் ஹ்ருதய குஹாசயாய நம:
ஓம் சதருத்ரீய வர்ணித ஸ்வரூபாய நம:
ஓம் கேதாரேஸ்வர நாதாய நம:
ஓம் அவித்யா நாசகாய நம:
ஓம் நிஷ்காம கர்மோபதேசகாய நம:
ஓம் லகுபக்திமார்கோபதேசகாய நம:
ஓம் லிங்கஸ்வரூபாய நம:
ஓம் ஸாலக்ராம ஸூக்ஷ்மஸ்வரூபாய நம:
ஓம் காலட்யாம் சங்கர கீர்த்திஸ்தம்ப நிர்மாண கர்த்ரே நம:
ஓம் ஜிதேந்த்ரியாய நம:
ஓம் சரணாகதவத்ஸலாய நம:
ஓம் ஸ்ரீ சைல சிகரவாஸாய நம:
ஓம் டமருகநாத விநோதனாய நம:
ஓம் வ்ருஷபாரூடாய நம:
ஓம் துர்மதநாசகாய நம:
ஓம் ஆபிசாரிகதோஷஹர்த்ரே நம:
ஓம் மிதாஹாராய நம:
ஓம் ம்ருத்யுவிமோசன சக்தாய நம:
ஓம் ஸ்ரீ சக்ரார்ச்சன தத்பராய நம:
ஓம் தாஸானுக்ரஹ காரகாய நம:
ஓம் அனுராதா நக்ஷத்ர ஜாதாய நம:
ஓம் ஸர்வலோக க்யாத சீலாய நம:
ஓம் வேங்கடேஸ்வர சரணபத்மஷ்டபதாய நம:
ஓம் ஸ்ரீ த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திமௌலீஸ்வர பூஜாப்ரியாய நம:



இதி ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதீஸ்வர ஜெகத்குரு சந்திர சேகரேந்திர சரஸ்வதி அஷ்டோத்திர சத நாமாவளி சம்பூர்ணம்.







பாதக மலங்களை போக்கும்
பாத கமலங்களை பணிவோம்

# சங்கரானந்தம்-22

## 24.05.2024



